07 APR 2009
Eastern University, Sri Lanka

# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை
## கலைகலாசார பீட வெளிவாரி இறுதியாண்டுத்தேர்வு - 2006/2007
## (சித்திரை/ வைகாசி 2009)
## தென்னாசியப் புவியியல் - GEO-302

யாதாயினும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள் புள்ளிகள் : 25x4 = 100
தென்னாசிய புறவரிப்பட்டம் வழங்கப்படும்

1. தரப்பட்டுள்ள தென்னாசிய புறவரிப்படத்தில் இப்பிராந்தியத்தின் முக்கிய பௌதிக தரைத்தோற்ற அமைப்பினைக் குறித்துக்காட்டி இத் தரைத்தோற்ற அமைப்பு எவ்வகையில் மழைவீழ்ச்சிப்பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைகின்றது என்பதனை விளக்குக.

2. இலங்கையின் புவிச்சரிதவியல் ஆய்வு வரலாற்றினை சுருக்கமாக விளக்கி இந்தியாவில் இருந்து பிரிந்த பகுதியே இலங்கை என்ற ஆய்வின் முடிவுகளை உறுதிப்படுத்த நீர் முன்வைக்கும் ஆதாரங்களை புனையா வரைபடங்களின் உதவியுடன் விளக்குக.

3. “தென்னாசியப் பிராந்தியம் இன்று எதிர்கொள்ளும் வறுமை உள்ளிட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு இப்பிராந்தியத்தில் காணப்படும் அதிகரித்த குடித்தொகையும் ஒரு காரணமாகும்” இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை உதாரணங்கள் தந்து விளக்குக.

4. “வேகமாக மாற்றமடைந்து வரும் உலக பொருளாதார நிலைமைகளுக்கு முகம்கொடுப்பதற்கேதுவாக தென்னாசிய நாடுகளும் தமது பாரம்பரிய பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து விலகி கைத்தொழில் சார் பொருளாதார நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டியது கட்டாய தேவையாக உள்ளது” இக் கூற்றினை நீர் ஏற்றுக் கொள்வீரா? தகுந்த ஆதாரங்கள் தந்து விளக்குக.

5. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஐந்தாண்டுத்திட்டங்கள் இந் நாட்டின் விவசாயத்துறையை விருத்தி செய்வதற்கு எந்தளவிற்கு பங்காற்றியுள்ளது என்பதனை நுணுக்கமாக ஆராய்க.

6. யாதாயினும் இரண்டிற்கு சிறுகுறிப்பெழுதுக.
   அ. தென்னாசிய நாடுகளின் நகர வளர்ச்சிப் போக்கு
   ஆ. தென்னாசியப் பிராந்தியத்தில் அரசியல் ரீதியான இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்
   இ. பருவக்காற்றுச் சுற்றோட்டம்